# டிபிகேஎல் அடுக்குமாடிக் குடியிருப்புகளை
# சோதனை செய்ய சிறப்புப் பணிக்குழு

கோலாலம்பூர், பிப். 14-

கோலாலம்பூர் மாநகர் மன்றத்திற்குச் சொந்தமான அனைத்து அடுக்குமாடிக் குடியிருப்புகளிலும் சோதனைகளை மேற்கொள்ள தீயணைப்பு - மீட்புப்படை சிறப்புப் பணிக்குழு ஒன்றை அமைத்துள்ளதாக கோலாலம்பூர் தீயணைப்பு - மீட்புப்படை இயக்குநர் முகமட் சாலே அப்துல் கூறினார்.

இந்தச் சிறப்புப் பணிக்குழு அனைத்து அடுக்குமாடிக் குடியிருப்புகளிலும் சோதனைகளை மேற்கொண்டு கோலாலம்பூர் மாநகர் மன்றத்திற்குச் (டிபிகேஎல்) சொந்தமான அந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளில் என்ன மாதிரியான சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரைக்கும் எனவும்



அவர் தெரிவித்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை செராஸிலுள்ள ஸ்ரீ சபா அடுக்குமாடியின் 17ஆவது மாடியில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 வீடுகள் முற்றாக அழிந்த நிலையில் தலைநகரிலுள்ள அனைத்து அடுக்குமாடிக் குடியிருப்புகளிலும் இந்தச் சோதனை மிகவும் அவசியம் எனவும் அவர் சொன்னார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கு ஏற்பட்ட தீ விபத்திற்கு வீடொன்றில் உள்ள மின்சாரப் பலகையில் ஏற்பட்ட மின்கசிவே காரணம் எனவும் தெரியவந்துள்ளதாக அவர் கூறினார்.

நேற்று ஸ்ரீ சபா அடுக்குமாடி தீவிபத்தில் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களைக் கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா நேரில் சந்தித்தபோது அவருடன் கலந்துகொண்ட இவர், பின்னர் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.